**Tamilmanam International Research Journal of Tamil Studies**

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

https://tamilmanam.in/

*Article Type: Research Article*

# The Influence of Purapporul in Thevaram

**Dr. A. Atheeswari[1*], M. Sumathi[2],**

[1]Associate Professor, Department of Tamil, The Madura College (Autonomous), Madurai -11, Tamilnadu, India. ORCiD: https://orcid.org/0009-0007-6523

[*]Correspondence:Email: sumasumathi930@gmail.com.

**Received**: 28-01-2026; **Revised**: 30-01-2026; **Accepted**: 05-02-2026; **Published**: 10-02-2026

**Abstract:** In the history of Tamil literature, the age of Devotional Literature is considered a golden era where language, art, and spirituality converged. Specifically, the Thevaram—comprising the first seven volumes of the Panniru Thirumurai—absorbed the Akam (interior/subjective) and Puram (exterior/objective) traditions of the Sangam era and successfully elevated them to a spiritual plane. This article provides a detailed exploration of how the elements of Sangam Purathinai, such as heroism, fame, and philanthropy, gained prominence within the Thevaram hymns.

This study reveals how the Purathinais defined by Tolkappiyar (from Vetchi to Paadaan) evolved during the Bhakti movement into 'Deva Paadaan' (praising the Divine) and into the Thumbai and Vaagai conventions to celebrate the heroic deeds of the Almighty. The article presents a nuanced perspective on how the Karupporul (thematic elements) of the holy shrines are used as symbols of divine grace and how the Kanchi Thinai (the theme of transience) underwent a spiritual transformation. Furthermore, it analyzes how Sangam Purapporul traditions acquired new dimensions in religious literature and the moral values they offered to later generations.

**Keywords:** Thevaram, Purapporul (Objective themes), Purathinai, Deva Paadaan, Tolkappiyam, The Trinity of Saivite Saints (Moovar Muthaligal), Karupporul (Thematic elements), Impermanence (Nilaiyamai), Heroic Deeds, Bhakti Literature, Thinai Classification, Sangam Literature.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# தேவாரத்தில் புறப்பொருளின் செல்வாக்கு

**[1]முனைவர் அ. ஆத்தீஸ்வரி**,

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை., மதுரைக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை-11.

**[2]மு . சுமதி,** கீழடி.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியக் காலம் என்பது மொழி, கலை மற்றும் ஆன்மீகம் ஆகிய மூன்றும் இணைந்த ஒரு பொற்காலமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளாகத் திகழும் தேவாரம், சங்க காலத்து அகப்பொருள் மற்றும் புறப்பொருள் மரபுகளை உள்வாங்கி, அவற்றை ஆன்மீகத் தளத்திற்கு வெற்றிகரமாக இட்டுச் சென்றது. இக்கட்டுரை, சங்க இலக்கியப் புறத்திணைக் கூறுகளாகிய வீரம், புகழ், கொடை போன்றவை தேவாரப் பதிகங்களில் எவ்வாறு ஆளுமை பெற்றுள்ளன என்பதை விரிவாக ஆராய்கிறது.

தொல்காப்பியர் கூறும் புறத்திணைகள் (வெட்சி முதல் பாடாண் வரை) பக்தி இயக்கக் காலத்தில் எவ்வாறு 'தேவ பாடாண்' ஆகவும், இறைவனின் வீரச் செயல்களைப் போற்றும் தும்பை மற்றும் வாகைத் திணைகளாகவும் பரிணமித்தன என்பதை இந்த ஆய்வு புலப்படுத்துகிறது. தேவாரத் திருத்தலங்களின் கருப்பொருள்கள், இறைவனின் அருளாற்றலை விளக்கும் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ள விதம், மற்றும் நிலையாமை குறித்த காஞ்சித் திணையின் ஆன்மீக உருமாற்றம் ஆகியவை குறித்து நுண்ணிய பார்வையை இக்கட்டுரை முன்வைக்கிறது. மேலும், சங்க இலக்கியப் புறப்பொருள் மரபுகள் எவ்வாறு சமய இலக்கியங்களில் புதிய பரிமாணங்களைப் பெற்றன என்பதையும், அவை பிற்காலச் சமுதாயத்திற்கு வழங்கிய அறநெறிகளையும் இக்கட்டுரை விரிவாகப் பகுப்பாய்வு செய்கிறது.

**2.0 கலைச்சொற்கள்**

தேவாரம், புறப்பொருள், புறத்திணை, தேவ பாடாண், தொல்காப்பியம், மூவர் முதலிகள், கருப்பொருள், நிலையாமை, வீரச்செயல், பக்தி இலக்கியம், திணைப் பாகுபாடு, சங்க இலக்கியம்.

**3.0 முன்னுரை**

சங்கத் தமிழரின் வாழ்வியலானது அகம் மற்றும் புறம் என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒத்த அன்புடைய தலைவன் தலைவி ஆகியோரின் உள்ளத்து உணர்வுகளை அக இலக்கியங்கள் பிரதிபலித்தன. அதே வேளையில், வீரம், கொடை, புகழ் மற்றும் சமூகம் சார்ந்த செயல்பாடுகளைப் புற இலக்கியங்கள் விரிவாக எடுத்துரைத்தன. சங்க கால மக்கள் அகவாழ்விற்கு அளித்த சிறப்பினைப் புறவாழ்விற்கும் அளித்தனர். புறம் என்பது ஒரு குறிப்பிட்ட மனிதனின் புகழை

மட்டும் குறிக்காமல், ஒட்டுமொத்தச் சமுதாயத்தின் வீரத்தையும் அறத்தையும் பறைசாற்றும் பதிவேடாக விளங்கியது.

காலப்போக்கில், இந்த இலக்கிய மரபானது பக்தி இலக்கியக் காலத்தில் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பக்தி இயக்கம், சங்க இலக்கியத்தின் அகம் மற்றும் புறம் சார்ந்த உத்திகளைக் கையாண்டு இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் சித்தரித்தது. இருப்பினும், புறப்பொருள் சார்ந்த கூறுகளான போர், வெற்றி, அரசனைப் புகழ்தல் போன்றவை மறைந்துவிடவில்லை. மாறாக, அவை நிலவுலக அரசர்களிடமிருந்து நீங்கி, பிரபஞ்சத்தின் நாயகனான இறைவனின் மீது ஏற்றிச் சொல்லப்பட்டன.

தமிழருடைய புறக்காட்சி நடை அவனது அழுக்கற்ற மனத்தின் உயர் நடைக்கோர் அறிகுறியாகும். எனவே சங்கத் தமிழர்கள் புறம் என்ற வாழ்வியல் பகுப்பினை உயர்நெறியாகக் கடைப்பிடித்தனர். இப்பகுப்பு வாழ்வியல் நெறிகளை நயம்படவும் நாகரிகமாகவும் சொல்லுதற்குப் பயன்பட்டது. இந்த அடிப்படையில் புறம் சுட்டும் உடல்வலிவையும், போர்ச்செயலையும் இயற்கைப் பண்புகளாக அக்கால மக்கள் போற்றினர். தேவாரத்தில் இந்தப் புறப்பொருள் பண்புகள் எவ்வாறு பக்திப் பெருக்கோடு இணைந்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

### 4.0 புறப்பொருள்: வரைவிலக்கணமும் இலக்கண அடிப்படையும்

புறப்பொருள் என்பது தனிமனிதனின் சமூகம் குறித்த செயல்களையும் உணர்வுகளையும், நினைவுகளையும் எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. இது சமுதாயத்தில் ஓர் உறுப்பாக அமைந்த தனிமனிதனின் சமூகம் குறித்த பதிவுகளை வெளிப்படுத்தும் ஒரு களமாகும்.

### 4.1 புறப்பொருள் விளக்கம்

"புறப் பொருளாவது மறஞ்செய்தலும், அறஞ்செய்தலும் ஆகும்" என இலக்கண நூல்கள் வரையறுக்கின்றன. ஒத்த அன்புடைய தலைவன் தலைவி இவர்களே அன்றி, அனைவராலும் துய்த்து உணரப்படுவதும், இவ்வாறு இருந்தது என்று பிறருக்குக் கூறப்படுவதும் புறமாகும். தொல்காப்பியத்தில் புறம் என்னும் வகைப்பாடு அகப்பொருள், அகத்திணை என வழங்குமிடங்களில் இவற்றிற்கு மறுதலையாக வருவனவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

இளம்பூரணர் அகம் என்பதனை உரிப்பொருளுள் முதற்கூறாக எண்ணி அகத்திணைகளின் மாட்டேறாக வருவனவே புறம் எனக் கூறுகிறார். எனவே, அகவாழ்வு இடையூறு இன்றிச் சிறப்புற நிகழ வீரமும், போர்நெறி உணர்வும் இன்றியமையாதன. காதல் வாழ்விற்கு ஒப்பாக வீரம், புகழ், கடமை என்பவற்றை மையமாகக் கொண்டு இல்லம் என்ற குறுகிய எல்லையில் நீங்கிச் சமுதாயம், நாடு என்ற பேரெல்லைக்குள் நடைபெறுவது புறவாழ்வு எனப்பட்டது.

https://doi.org/10.63300/tm08sp022026

### 4.2 தொல்காப்பியப் புறத்திணைப் பாகுபாடு

அகத்திணைகளைக் குறிப்பிடும் தொல்காப்பியர், கைக்கிளை முதல் பெருந்திணை வரை ஏழு திணைகளாக வரையறுக்கிறார். அதற்கு இணையாகப் புறத்திணைகளையும் ஏழு என அவர் வகுத்துள்ளார்.

**"வெட்சி தானே குறிஞ்சியது புறனே"**

இளம்பூரணரின் கருத்துப்படி, புறத்திணைகள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழுவகைப்படும். ஒவ்வொரு புறத்திணையும் ஓர் அகத்திணைக்குப் புறன் எனப் பொருத்திக் காட்டப்படுகிறது.

| **அகத்திணை** | **புறத்திணை** | **விளக்கம் (செயல்பாடு)** |
|---|---|---|
| குறிஞ்சி | வெட்சி | பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவர்தல் |
| முல்லை | வஞ்சி | மண்ணாசை கொண்டு பகைவர் நாட்டின் மேல் போருக்குச் செல்லுதல் |
| மருதம் | உழிஞை | பகைவரின் கோட்டையைச் சுற்றி வளைத்து முற்றுகையிடல் |
| நெய்தல் | தும்பை | வலிமையை வெளிப்படுத்தி நேருக்கு நேர் போர் புரிதல் |
| பாலை | வாகை | போரில் வெற்றி பெற்று வெற்றியைக் கொண்டாடுதல் |
| பெருந்திணை | காஞ்சி | வாழ்வின் நிலையாமையை எடுத்துரைத்தல் |
| கைக்கிளை | பாடாண் | ஒருவருடைய புகழ், கொடை, அருள் போன்றவற்றை வியந்து பாடுதல் |

### 4.3 பிற்கால இலக்கண வளர்ச்சியும் புறப்பொருள் வெண்பாமாலையும்

தொல்காப்பியத்தின் ஏழு திணைக் கோட்பாடு பிற்காலத்தில் பன்னிரண்டு திணைகளாக விரிவடைந்தது. பன்னிரு படலம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்கள் இந்த மாற்றத்தை முன்னெடுத்தன. இதில் கரந்தை (ஆநிரை மீட்டல்), நொச்சி (கோட்டையைக் காத்தல்), பொதுவியல் (அறக்கருத்துகள்), கைக்கிளை மற்றும் பெருந்திணை போன்றவை தனித்தனிப் புறத்திணைகளாகக் கொள்ளப்பட்டன. சமய இலக்கியங்கள் குறிப்பாகத் தேவாரம், இந்த இருவகை இலக்கண மரபுகளையும் உள்வாங்கித் தமக்கான தனித்துவமான சமயப் புறப்பொருள் மரபைக் கட்டமைத்துக் கொண்டன.

https://doi.org/10.63300/tm08sp022026

### 5.0 சங்க இலக்கியத்திலிருந்து பக்தி இலக்கியத்திற்கான மாற்றம்

சங்க இலக்கியத்தில் போரும், போர் சார்ந்த துறைகளுமாகப் பல துறைகள் சுட்டப்படுகின்றன. வெட்சியில் உண்டாட்டும், கரந்தையில் செருமலைதல், வஞ்சியில் கொற்றவன் வள்ளையும் மழபுல வஞ்சியும் முக்கிய இடம் பெற்றன. தும்பையில் தானைமறம், எருமைமறம், களிற்றுடனிலை போன்ற வீர உணர்வுகள் மேலோங்கி நின்றன. வாகையில் மறக்கள வேள்வியும், காஞ்சியில் மகட்பாற் காஞ்சியும் வஞ்சினக்காஞ்சியும் தொல்காப்பியத்தில் இடம்பெற்று சங்கபுறப் பாடல்களில் பயின்றுவரும் போர்த்துறைகளாகும்.

சமய இலக்கியங்களில் காலப்போக்கில் இந்தப் போர்த்திணைகளில் இடம் பெற்ற சில துறைகள் மறைந்து போகத் தொடங்கின. அரசனைப் புகழும் பாடாண்திணை இறைவனைப் புகழும் 'தேவ பாடாண்' ஆகப் பரிணமித்து நின்றது. மனித உணர்வுகளை வீரம், ஈரம் என இரு களங்களுக்குள் அடக்கி முன்னதில் வெற்றியையும், பின்னதில் கொடையையும் கூறிப் புகழும் மரபு சங்க காலத்தில் காணப்பட்டது. அம்மரபிற்கு ஏற்ப மூவர் தேவாரத்தில் தலைவனான இறைவனின் அருளாற்றல் வீரம், வலிமை, அருள்தன்மை ஆகியன சுட்டப்படுகின்றன.

### 6.0 தேவாரத்தில் புறத்திணைகளின் விரிவான ஆய்வு

தேவாரப் பதிகங்களில் புறத்திணைகள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பதைத் தரவுகளின் அடிப்படையில் காண்போம்.

### 6.1 வெட்சி மற்றும் கரந்தை: ஆன்மீகப் பாதுகாப்பு

வெட்சி என்பது பகைவரின் ஆநிரைகளைக் கவர்வதாகும். சங்க காலத்தில் இது போரின் தொடக்கமாகக் கருதப்பட்டது. தேவாரத்தில், ஆன்மாக்கள் 'பசு'க்களாக உருவகிக்கப்படுகின்றன. அறியாமை மற்றும் ஆணவம் என்ற பகைவர்களால் கவரப்பட்ட ஆன்மாக்களை இறைவன் மீட்டெடுக்கும் செயல், மறைமுகமாக வெட்சி மற்றும் கரந்தை மரபுகளை நினைவூட்டுகின்றன. இறைவன் 'பசுபதி'யாகத் திகழ்வது, ஆன்மாக்களின் பாதுகாவலனாக அவனது வீரத்தையும் கருணையையும் ஒருசேரப் புலப்படுத்துகிறது.

### 6.2 தும்பைத் திணை: இறைவனின் பேராற்றல்

வலிமையை நிலைநாட்டும் தும்பைத் திணை தேவாரத்தில் இறைவனின் வீரச் செயல்கள் வழியாக வெளிப்படுகிறது. குறிப்பாக, திரிபுரம் எரித்த செயல் தும்பைத் திணையின் உச்சமாகக் கருதப்படுகிறது.

- **அசுரர் கோட்டை அழிப்பு:** தம்மைக் கருதாத அசுரர்களின் மூன்று கோட்டைகளை இறைவன் அழித்த நிகழ்வு, தும்பைத் திணையின் 'தானை மறம்' போன்ற துறைகளுக்கு இணையானது.
- **போர்க்களக் காட்சிகள்:** எருதை வாகனமாகக் கொண்டு போர் புரிபவராகவும், மழு மற்றும் தீப்பிழம்பை ஏந்தியவராகவும் இறைவன் வர்ணிக்கப்படுகிறான்.

"தம்மைக் கருதாதவராகிய அசுரர்களின் முப்புரங்களை எய்து அழித்தவரும், எருதை வாகனமாகக் கொண்டு இனிதாக ஊர்பவரும் ஆகிய சிவபெருமானுக்கு திருவிடைமருதூரே விரும்பி உறையும் இடம் ஆகும். அவரைத் தொழுதால் புகழ் சேரும்."

இப்பாடல் வரிகள் இறைவனின் அழிக்கும் தொழிலை (சங்காரம்) வீரச் செயலாகவும், அதன் மூலம் அடியார்களுக்குக் கிடைக்கும் புகழைப் புறப்பொருள் வெற்றியாகவும் சித்திரிக்கின்றன.

### 6.3 வாகைத் திணை: வெற்றியின் அடையாளம்

வாகை என்பது வெற்றியைக் குறிக்கும். வாகைப் படலம் இறைவனின் வெற்றி பற்றி மட்டும் அன்றி, அந்தணர்கள், அடியார்கள் போன்றோரின் வெற்றியையும் பேசுகிறது. வாகைத் திணையில் 32 துறைகள் உள்ளன.

| வாகைத் துறை | விளக்கம்/தேவாரப் பயன்பாடு |
|---|---|
| அரச வாகை | பிரபஞ்சத்தின் அரசனாக இறைவனின் வெற்றி |
| மறக்களவழி | போர்க்களத்தில் வீரத்தைப் புகழ்தல் (தீமையை அழித்தல்) |
| அறிவன் வாகை | முக்காலமும் உணர்ந்த ஞானிகளின் மேன்மை |
| தாபத வாகை | புலன்களை வென்ற துறவிகளின் தவ வலிமை |
| மூதின் முல்லை | வீரக் குடிப் பிறந்தவர்களின் சிறப்பைப் பாடுதல் |

புறப்பொருள் வெண்பா மாலையில் வாகைத் திணை மிகுந்த வளர்ச்சியடைந்துள்ளது. தேவாரத்தில் அவிப்பலி, கண்படை நிலை போன்ற துறைகள் இறைவனுக்குச் செய்யப்படும் பூசனைகளோடும், யோக நிலைகளோடும் தொடர்புபடுத்தப்படுகின்றன.

### 6.4 காஞ்சித் திணை: நிலையாமை குறித்த அறம்

தொல்காப்பியர் காஞ்சித் திணையை 'நிலையாமையை உணர்த்துவது' எனக் கொள்கிறார். இது பெருந்திணைக்கு இடனாகும். சங்க காலத்தில் போர் தடுத்தலாக இருந்த காஞ்சி, பக்தி இலக்கியத்தில் வாழ்வியலின் நிலையாமையை எடுத்துரைக்கும் தத்துவத் திணையாக மாறியது.

- **வளர்ச்சி:** செல்வம், இளமை, யாக்கை ஆகியவை நிலையற்றவை என்பதைத் தேவார மூவர்கள், குறிப்பாகத் திருநாவுக்கரசர் தமது பதிகங்களில் ஆழமாகப் பதிவு செய்துள்ளனர்.
- **மறத்தில் அறம்:** நிலையாமை என்னும் அறத்தை எதிர் ஊன்றலாகிய மறத்தில் வைத்துப் பாடும் மரபு பழைய இலக்கண ஆசிரியர்களின் கொள்கையாக இருந்தது. இது தேவாரத்தில் உலக இன்பங்களை மறுத்து இறைவனைப் பற்றிக் கொள்ளும் துறவறமாக வெளிப்படுகிறது.

"காஞ்சி மறவர்கள், தமது வீரத்தை நிலைநாட்டுதற்குரிய போரினை வாய்க்கப் பெற்றிலாமையால், மலையினின்று வீழ்ந்தேனும் இறப்போம் என்றிருந்த நிலையில், காஞ்சி மன்னன் தனது மலையகத்துச் சீறூரைக் காக்கக் காஞ்சிப் பூவைச் சூடி மலைந்தான்."

இந்த வீர உணர்வு தேவாரத்தில் ஆன்மீகப் போராட்டமாக, அதாவது மனதை ஒருநிலைப்படுத்தி ஐம்புலன்களை அடக்கும் வீரமாகக் கருதப்படுகிறது.

### 6.5 பாடாண் திணை: புகழும் தேவ பாடாணும்

பாடாண் திணை என்பது ஒருவனுடைய புகழைப் பாடுவதாகும். இது தேவாரத்தில் இறைவனைப் புகழும் 'தேவ பாடாண்' ஆக மாறியது. இறைவனின் கொடைத் தன்மை, அருள், அழகு, வீரம் ஆகியவற்றை வியந்து பாடுவதே இத்திணையின் முக்கிய நோக்கமாகும்.

- **கொடை:** இறைவனை ஒரு பெரும் வள்ளலாகச் சித்தரிக்கும் பாடல்கள் தேவாரத்தில் பல உள்ளன.
- **திருவிழாக்கள்:** திருவிழாக்கள் உலகியல் அடிப்படையில் மக்களைச் சிறப்பு செய்வதற்காகப் பாடப்படும் பாடாண் திணையின் வளர்ச்சிக் கூறுகளாக உள்ளன.

"திருவிழா என்பது கடவுள் மாட்டு மாந்தர்க்கு உண்டாகும் அன்பினை வெளிப்படுத்துவது".

சங்க காலத்தில் அரசர்களுக்கு நடத்தப்பட்ட விழாக்களே பிற்காலத்தில் இறைவனுக்குரிய திருவிழாக்களாக உருப்பெற்றன என்பதைத் தேவ பாடாண் திணை விளக்குகிறது.

## 7. தேவாரத்தில் கருப்பொருள்களின் செல்வாக்கு

தொல்காப்பியம் நிலம் சார்ந்த முதற்பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் என்ற மூன்றினை விளக்குகிறது. இதில் கருப்பொருள் என்பது ஒரு நிலத்தின் உயிர்நாடியாகக் கருதப்படுகிறது. தேவாரத் தலங்களின் இயற்கை வளங்களை வருணிப்பதில் கருப்பொருள்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### 7.1 கருப்பொருள் கூறுகள்

தேவார மூவர்கள் பதிகங்களில் அந்தந்த ஊர்களின் புவியியல் மற்றும் சமூகக் கூறுகளைத் துல்லியமாகப் பதிவு செய்துள்ளனர்.

| **கருப்பொருள்** | **தேவாரத்தில் சான்றுகள்** |
|---|---|
| தெய்வம் | சிவபெருமான், உமையம்மை |
| உணவுகள் | நெல், கனி, தேன், பால் |
| விலங்குகள் | யானை, மான், இடபம், மயில் |
| பூக்கள் | வஞ்சி, தும்பை, வாகை, முல்லை |
| இசைக்கருவிகள் | யாழ், பறை, தாளம், உடுக்கை, கத்திரிகை |
| தொழில் | வேள்வி செய்தல், உழுதல், பூமாலை தொடுத்தல் |

### 7.2 ஆன்மீகப் பின்னணியில் கருப்பொருள்கள்

கருப்பொருள்கள் வெறும் இயற்கை வருணனைகளாக மட்டும் பயன்படுத்தப்படவில்லை. அவை ஆன்மீக உண்மைகளை விளக்கும் குறியீடுகளாகவும் உள்ளன. உதாரணமாக, சீகாழிப் பதியில் வண்டுகள் யாழ் போல இசைப்பது இறைவனின் திருவருளைப் பாடுவதாகக் கருதப்படுகிறது. கருப்பொருள் என்பது ஒரு நிலப்பகுதியின் ஆன்மீக அடையாளத்தை (Spiritual Identity) கட்டமைக்கப் பயன்படுகிறது.

## 8. இறைவனின் வீரமும் கொடையும்: ஒரு பகுப்பாய்வு

தேவாரத்தில் இறைவனின் வீரம் 'மறக்கருணை' என்றும், அவனது அருள் 'அறக்கருணை' என்றும் போற்றப்படுகிறது.

### 8.1 இறைவனின் வீரச்செயல்கள் (Puram Actions of Deity)

இறைவன் பத்துத் தலைகளை உடைய இராவணனை அடக்கியது, எமனை உதைத்தது போன்ற செயல்கள் வீரத்தைப் புலப்படுத்தும் புறப்பொருள்களாகும்.

"பத்துத் தலைகளை உடைய இராவணனை அவன் கதறி அழுமாறு கால் விரலை ஊன்றி அடர்த்த திருமுதுகுன்றத்துத் தலைவனாகிய சிவபிரானை நெருங்கிச் சென்று பணிவீராக."

இப்பாடல் இராவணனின் ஆணவத்தை அடக்கிய இறைவனின் வீரத்தை (பாடாண் மற்றும் தும்பை மரபு) வெளிப்படுத்துகிறது. அதேபோல், எமனை உதைத்த செயல் காலத்தை வென்ற இறைவனின் வலிமையைச் சுட்டுகிறது.

### 8.2 கொடை மரபு (Tradition of Munificence)

சங்க கால வள்ளல்களைப் போலவே இறைவனும் அடியார்களுக்குப் பெரும் கொடை வழங்குபவனாகத் தேவாரத்தில் போற்றப்படுகிறான். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பதிகங்களில் இறைவனின் 'வள்ளல் தன்மை' பல இடங்களில் சுட்டப்படுகிறது. "பச்சமுடை யடிகள் திருப் பாதம்பணி வாரே" என்பது போன்ற வரிகள், அன்போடு பணிபவர்களுக்கு இறைவன் வழங்கும் அருளைக் கொடையாகக் காட்டுகின்றன.

## 9. சமூகப் பதிவுகளும் வாழ்வியல் விழுமியங்களும்

புறத்திணைகள் சமுதாய வாழ்வியல் பதிவேடுகளாக விளங்குகின்றன. தேவாரப் பதிகங்கள் மூலமாக அக்காலச் சமூகத்தின் பல நிலைகளை நாம் அறிய முடிகிறது.

- **மக்களின் மனநிலை:** சங்கத் தமிழர்கள் புறவாழ்வை உயர்நெறியாகக் கருதினர். தேவாரத்தில் இந்தப் புறவாழ்வு பக்தி நெறியோடு இணைக்கப்பட்டு, மக்கள் அறம் சார்ந்த வாழ்க்கையை வாழத் தூண்டப்பட்டனர்.
- **பொருளாதாரப் பதிவுகள்:** பதிகங்களில் கூறப்படும் ஊர்களின் வளமை, அங்கு நடைபெறும் தொழில்கள் போன்றவை அக்காலப் பொருளாதார நிலையைப் பிரதிபலிக்கின்றன.
- **நிலையாமைக் கொள்கை:** இளமை, பொருள், யாக்கை என்பன நிலையாது கழியும் என்ற சிந்தனை மக்களை நிலையான ஆன்மீகப் பொருளை நோக்கிச் செலுத்தப் பயன்பட்டது.

மக்களிடையே தோன்றும் வீர மற்றும் வெகுளி உணர்வுகளுக்குப் புறத்திணைப் பனுவல்களே அடிப்படையாக உள்ளன. இவை வாழ்வின் உண்மைகளை அறிந்து சிந்திக்க வழிவகுக்கின்றன.

### 10. மூவர் தேவாரத்தில் புறப்பொருள் வெளிப்பாடு: ஒரு ஒப்பீடு

தேவார மூவர்களும் புறப்பொருள் மரபுகளைத் தத்தமது தனித்துவமான பாணிகளில் கையாண்டுள்ளனர்.

| பாடகர் | புறப்பொருள் அணுகுமுறை |
|---|---|
| திருஞானசம்பந்தர் | இயற்கைக் கருப்பொருள்கள், இறைவனின் வீரச் செயல்கள் (திரிபுரம் எரித்தல்), இசைப் புகழுரைகள் |
| திருநாவுக்கரசர் | நிலையாமை (காஞ்சி), துறவற வெற்றி (வாகை), சமூகத் தொண்டு |
| சுந்தரமூர்த்தி நாயனார் | இறைவனுடனான தோழமை, அரசரைப் போன்ற சிறப்புகள், புகழுரைகள் |

சம்பந்தர் பாடல்களில் 'இயற்கை' இறைவனின் வீரத்திற்குப் பின்னணியாக அமைகிறது. நாவக்கரசர் பாடல்களில் 'நிலையாமை' ஒரு தத்துவார்த்தப் போராட்டமாக வெளிப்படுகிறது. சுந்தரர் பாடல்களில் புறப்பொருள் என்பது ஒரு வாழ்வியல் கொண்டாட்டமாக அமைகிறது.

### 11. ஆய்வு முடிவுகளும் தொகுப்புரையும்

தேவாரத்தில் புறப்பொருளின் செல்வாக்கு என்பது வெறும் இலக்கணப் பயன்பாடு மட்டுமல்ல, அது ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சியாகும். சங்க காலத்துப் புறப்பொருள் மரபுகள் எவ்வாறு பக்தி இயக்கக் காலத்தில் உருமாற்றம் பெற்றன என்பதை இந்த ஆய்வு விரிவாக விளக்கியுள்ளது.

1. **ஆன்மீக வீரப் பரிமாணம்:** சங்க காலத்தில் மண்ணுக்காகவும் ஆநிரைக்காகவும் நடைபெற்ற போர்கள், தேவாரத்தில் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களை அழிக்கும் ஆன்மீகப் போராக உருமாற்றம் பெற்றன. இறைவனின் வீரச் செயல்கள் (திரிபுரம் எரித்தல், காலனை உதைத்தல்) இதற்கான சான்றுகளாக அமைந்தன.

2. **தேவ பாடாண் திணை:** மனித அரசர்களைப் பாடிய பாடாண் திணை, இறைவனைப் பாடும் தேவ பாடாண் ஆக மலர்ந்தது. இது கோவில்களில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் சடங்குகள் வழியாக இன்றும் உயிர்ப்புடன் உள்ளது.

3. **நிலையாமைத் தத்துவம்:** காஞ்சித் திணை நிலையாமையை வலியுறுத்தும் அறத்திணையாகத் தேவாரத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இது உலகியல் பற்றுகளைத் துறந்து இறைவனை அடையத் தூண்டும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

4. **இயற்கைப் பதிவுகள்:** கருப்பொருள்கள் வழியாகத் தேவாரப் பதிகங்கள் தமிழ்நாட்டின் புவியியல் மற்றும் இயற்கை வளங்களை ஆவணப்படுத்தியுள்ளன. இயற்கை என்பது இறைவனின் ஒரு பகுதியாகவே போற்றப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, அகம் மற்றும் புறம் எனும் பாகுபாடு வாழ்வியல் மரபிலிருந்து தோன்றி இலக்கிய மரபாக உருப்பெற்றுப் பின்னர் இலக்கண மரபாயிற்று. தேவாரமானது இந்த இலக்கண மரபினைச் சமயத் தளத்தில் வெற்றிகரமாகப் பொருத்தி, தமிழரின் வீர வாழ்வை ஆன்மீக வாழ்வோடு இணைத்துள்ளது. இன்றும் மக்களிடையே தோன்றும் வீர உணர்வுகளுக்கும், நிலையற்ற வாழ்வை உணர்ந்து அறவழியில் செல்வதற்கும் தேவாரத்திலுள்ள புறப்பொருள் கூறுகளே அடிப்படையாக உள்ளன.

---

### 12.0 பார்வை நூல்கள் (References in MLA Style)


1. Atheeswari, A. "The Dominance of 'Karupporul' (Native Elements) in Saiva Thirumurai: A Comprehensive Study." *Tamilmanam International Research Journal*, vol. 7, no. 1, 2026, pp. 168-176.

2. Ilampooranar. *Tolkappiyam Porulathikaram - Ilampooranar Commentary*. Edited by V. O. Chidambaranar, 1930.

3. Mohan, R., and Nellai N. Sokkalingam. *உரை மரபுகள் [Conventions of Commentaries]*. Meiyappan Padhippagam, 2011.

4. Ramasubramanian, V. T. *Thevaram Revealed by Thirugnanasambandhar Swamigal*. Vardhaman Pathippagam, 1998.

5. Subramaniapillai, G. *Tamilar Ullam*. 1950, p. 130.

6. *Tolkappiyam: Porulathikaram*.

7. *Purapporul Venba Maalai*. Iyyanarithanar, 9th Century CE.

8. *Eighteenth Seminar Research Collection*. Vol. 3, Madurai Kamaraj University.